## கண்ணகி நகருக்கு அருகாமையில் புதிதாக கட்டமைக்கப்பட்ட மறுகுடியமர்வு பகுதியான எழில் நகரின் கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளுக்கான நிலை குறித்த மதிப்பீடு

கடந்த மே 2015-ல் டிரான்ஸ்பெரன்ட் சிட்டீஸ் நெட்வொர்க் மேற்கொண்ட ஆய்வறிக்கையின் தொகுப்பு இது. ஏறத்தாழ 78,280 மக்களை உள்ளடக்கிய 15,656 குடியிருப்புகளை உள்ளடக்கியது கண்ணகி நகர். 2013-ஆம் ஆண்டு கண்ணகி நகருக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட எழில் நகரில் கட்டமைத்துள்ள 8,048 குடியிருப்புகளுள் 2,650 நிரப்பப்பட்டுள்ளன. எனினும் எழில் நகருக்கென பிரத்யேகமாக எந்த வசதிகளும் செய்து தரப்படவில்லை. எனவே கண்ணகி நகரின் அடிப்படை வசதிகளை கண்ணகி நகர் மற்றும் எழில் நகர் பகுதியை சேர்ந்த 23,704 குடியிருப்புகளில் வசிக்கும் சுமார் 1,18,520 மக்கள் பற்றாகுறையுடன் பயன்படுத்தி வருகின்றனர். இந்த மறுகுடியமர்வு பகுதியில் இருக்கும் வசதிகள் மற்றும் அதன் தரம், போதுமான நிலைக் குறித்த மதிப்பீடு இந்த தொகுப்பில் வழங்கப்பட்டுள்ளது.

24 தொகுப்புகளை ஒரு தளத்தில் கொண்ட 4 அடுக்குமாடிகளை உள்ளடக்கிய குடியிருப்பே எழில் நகர்.

- **வடிவமைப்பின் கோளாறுகள்:** கட்டடங்களில் மின்தூக்கி வசதியில்லை: இங்குள்ள குறுகலான படிக்கட்டுகள் மாற்றுத்திறனாளிகளுக்கும் முதியவர்களுக்கும் பாதகமாக உள்ளது. நெருக்கமான கட்டமைப்பால் தளத்தில் நடைப்பாதைக்கென்று பிரத்யேக இடமில்லை.

- **தண்ணீர் மற்றும் சுகாதாரம்:** மேல்நிலைத் தொட்டிகள் மூலமாக இரண்டு நாளுக்கு ஒருமுறை தண்ணீர் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுப்பிலும் கழிவறை/குளியலறைக்கென்று ஒரு குழாய் பொருத்தப்பட்டுள்ளது. தரைத்தள வீட்டுத்தொகுப்புகள் கழிவுநீர் குழாயுடன் இணைக்கப்பட வில்லை. மேலும் பயன்பாட்டில் இருக்கும் குழாய்கள் பழுதுபட்டு சீரமைக்கப்படாமல் உள்ளன. இத்தகைய

வடிகால் பழுதால் குடியிருப்புகளை சுற்றி கழிவுநீர் தேக்கம் ஏற்படுகிறது.

- **அங்கன்வாடி:** எழில் நகரின் தற்போதைய மக்கள்தொகைக்கு 16 அங்கன்வாடிகள் தேவைப்படும் பொழுதிலும் இங்கு ஒரு அங்கன்வாடியே செயல்பாட்டில் உள்ளது. மேலும் 2 பரிந்துரைக்கப்பட்டுள்ளன. கண்ணகி நகரில் 19 அங்கன்வாடிகள் அரசினாலும், 15 அங்கன்வாடிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான மையம் ஒன்றும் அரசு சாரா நிறுவனங்களாலும் பராமரிக்கப்படுகிறது. இந்த மையங்கள் முறையற்ற கட்டமைப்புகளோடும், அனைத்துக் குழந்தைகளும் பயன்பெற இயலாத போதாத வசதிகளோடும் உள்ளன. மேலும் கண்ணகி நகர் மற்றும் எழில் நகர் பகுதியில் உள்ள அங்கன்வாடிகள் (19+1), கர்ப்பிணி மற்றும் பிரசவித்த பெண்களுக்கு சத்துமாவை வழங்குகிறது. ICDS திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற சேவைகள் (தடுப்பூசி, மருத்துவ பரிசோதனை, சத்துணவுக் கல்வி) எதுவும் இங்குள்ள வளரிளம் பெண்கள் / கர்ப்பிணி மற்றும் பிரசவித்த பெண்களுக்கு வழங்கப்படவில்லை.

- **பள்ளிகள்:** எழில் நகருக்கென்று பள்ளிவசதிகள் இல்லை. கண்ணகி நகரில், அரசு மேல்நிலை பள்ளி ஒன்றும், தொடக்கப்பள்ளி மூன்றும் தேவைக்கு அதிகமான குழந்தைகளுடன் நடத்தப்படுகின்றன. எழில் நகரில் வெறும் 43 குழந்தைகள் அரசு பள்ளியில் பயில்கின்றனர். சிலர் அருகாமையில் உள்ள தனியார் பள்ளிகளுக்கும், பெரும்பாலானோர் இரண்டு மணிநேரத்திற்குமேல் பயணம் செய்து இடமாற்றத்திற்கு முந்தைய பள்ளிகளில் கல்வியை தொடர்கின்றனர்.

- **பொது விநியோகத் திட்டம்:** எழில் நகரில் தற்போது ஒரு ரேஷன் கடை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது (கள ஆய்வின் போது கட்டமைப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்தது). கண்ணகிநகரிலுள்ள 7 கடைகளில் 2-யை எழில் நகர் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இக்கடைகள் கூட்டநெரிசலோடும் பலசரக்கு வழங்குவதில் பற்றாகுறையுடனும் உள்ளதாக மக்கள் பகிர்ந்து கொண்டனர்.

- **மருத்துவசேவை**: கண்ணகி நகர் மற்றும் எழில் நகரில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. மாநகராட்சியின் மருந்தகம் ஒன்று கண்ணகி நகரில் உள்ளது. 3 கி.மீ. தொலைவிலுள்ள துரைப்பாக்கத்தில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம், OMR பகுதி மக்கள் அனைவருக்கும் சேவை அளித்து வருவதால் இங்கும் கூட்ட நெரிசலுடனே காணப்படுகிறது. அரசு மருத்துவமனைக்கு மக்கள் 2 மணிநேரத்திற்கு மேல் பேருந்தில் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

- **பாதுகாப்பு:** எழில் நகர் பகுதியில் பல திருட்டு சம்பவங்கள் நடந்தபோதிலும் காவல்துறையினரால் அதிக கவனம் செலுத்தப்பட முடிவதில்லை. மேலும் குடிப்புகாத குடியிருப்புகள் சமூக விரோத செயல்களுக்கு பயன்படுத்தபடுவதாக மக்கள் தெரிவித்தனர்.

- **போக்குவரத்து:** எழில் நகரை விட்டு ஒரு கி.மீ. தொலைவிலுள்ள கண்ணகி நகரில் பேருந்து நிலையம் உள்ளது. சில முக்கிய வழித்தடங்களில் (கோயம்பேடு, தாம்பரம்) பேருந்துகள் இயக்கப்படவில்லை. இங்கும் கூட்ட நெரிசலுடன் போதிய தேவையை சமாளிக்க இயலாத விதமாகவும் உள்ளது. இவர்கள் நகரத்திற்கு வருவதற்கு 2 மணிநேரத்திற்கு அதிகமாகவும், அதிக செலவும் செய்ய வேண்டியுள்ளது.

- **வாழ்வாதாரம்**: இம்மக்கள் தங்கள் முந்தைய வேலையை தொடர பயணத்திற்கு அதிக பணமும் நேரமும் செலவிடுகிறார்கள் (உதாரணத்திற்கு - எழில் நகர் பிராட்வே-லிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ளது). இதனால் பலர் தங்கள் வேலையை இழந்துள்ளனர்.

**மேற்கண்ட தகவல்களின் படி எழில் நகரில் அடிப்படை வசதிகள் மிக மோசமான நிலையில் உள்ளன. இதன் மூலம் மக்களை இந்நிலையில் குடியமர்த்துவது சாதகமற்றது என்பது தெளிவாகிறது.**